**O.S. No. 18 /2016**

**Date: 23.06.2026**

**வா.சா. 1 சீத்தாராமன்**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

1ம் பிரதிவாதியின் மகள் சென்னையில் இருந்து வருகிறார் என்றால் சரிதான். மகளை பார்ப்பதற்காக 1ம் பிரதிவாதியும், 2ம் பிரதிவாதியும் சென்னைக்கு செல்வார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய பிராதில் ரெங்கராஜ் என்பவரின் உடன்பிறந்த சகோதரியான சுபாலட்சுமி என்பவரின் மகன் தான் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் மனைவி ஆவார். மேற்படி உறவு முறையைப் பயன்படுத்தி தபசில் சொத்தில் உரிமை இருப்பதாக கூறிக்கொண்டு எனக்கு இடையூறு செய்ததால் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மகாலட்சுமி என்பவரும், அவரது கணவர் ரெங்கராஜ் என்பவரும் என்னிடம் ரூ.1லட்சம் வாங்கி கொண்டு 5 ஆண்டுகளுக்கு கதவு எண். 2/125, 2/126 ஆகிய வீடுகளை அனுபவம் செய்துவர சம்மதித்து எழுதிக்கொடுத்தார்களா என்றால் பதிவு செய்யாத ஒத்தி பத்திரம் எழுதிக்கொடுத்தார்(வா.சா.ஆ.9). மகாலட்சுமியோ அல்லது அவரது மருமகன் நடராஜனோ ரூ.1லட்சம் கொடுத்துவிட்டு மேற்படி வீட்டினை மீட்டிக்கொள்ள வேண்டும் என்று ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார்களா என்றால் மகலாட்சுமியும், ரெங்கராஜ் என்பவர்களும் சேர்ந்துதான் வீட்டை மீட்டிக்கொள்வதாக எழுதிக்கொடுக்கப்பட்டது. மகாலட்சுமி, ரெங்கராஜ் என்பவரும் மீட்டிக்கொள்ளமுடியவில்லை என்றால் நடராஜன் மேற்படி வீட்டினை தொகை கொடுத்துவிட்டு மீட்டிக்கொள்ள வேண்டியது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி ஒத்தி பத்திரத்தில் கண்டுள்ள பணத்தை மீட்டிக்கொள்ள நடராஜனுக்கு அதிகாரம் இல்லை என்றால் சரிதான். மகாலட்சுமி ஆங்கிலத்தில் கையெழுத்து செய்வார்களா என்றால் தமிழில் கையெழுத்து செய்வார் கை நடுக்கம் இருந்தால் கைரேகை செய்வார். ஒத்தி ஆவணத்தில் கைரேகை எதுவும் வைக்கவில்லை அவர் கையெழுத்து

செய்துள்ளார். மேற்படி ஒத்தி பத்திரத்தில் மகாலட்சுமி, மற்றும் ரெங்கராஜன் ஆகியோர்கள் ஒரு கையெழுத்து தான் செய்தார்கள். மேற்படி ஒத்தி ஆவணம் கழுகுமலையில் உள்ள பத்திர அலுவலகத்தில் தட்டச்சு செய்யப்பட்டது கைப்பட எதுவும் எழுதப்படவில்லை ஒரே பத்திரத்தில் முடித்துவிட்டார்கள். அதில் நான் கையெழுத்து எதுவும் போடவில்லை. மேற்படி ஒத்தி பத்திரம் பேனாவால் எழுதப்படவில்லை. மேற்படி ஒத்தி ஆவணம் ஒரே ஸ்டாம் பேப்பரில் எழுதப்பட்டது என்றால் சரிதான். வேறு எந்த பேப்பரிலும் எழுதப்பட்டதா என்று கேட்டால் எழுதப்படவில்லை . பச்சை தாளில் எழுதப்பட்டிருந்தால் அது தவறு என்றால் எழுதப்படவில்லை.மேற்படி ஒத்தி ஆவணம் எழுதும்போது மகாலட்சுமி மற்றும் ரெங்கராஜன் ஆகியோர்கள் மட்டும் தான் இருந்தார்கள். மகாலட்சுமி மற்றும் ரெங்கராஜன் ஆகியோர்கள் கழுகுமலைக்கு வந்தார்களா என்றால் இல்லை நான் தட்டச்சு செய்து வாங்கி வந்தேன். அதில் மேற்படி இருவரும் கையெழுத்து செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து மகாலட்சுமி மற்றும் ரெங்கராஜன் என்பவர்களின் கையெழுத்து தான். மேற்படி கையெழுத்து செய்த ஆவணத்தை என்னிடம் கொடுத்துவிட்டார்கள். வேறு எந்த ஆவணத்தையும் மகாலட்சுமி மற்றும் ரெங்கராஜ் ஆகியோர்கள் எழுதிக்கொடுக்கவில்லை. வா.சா.ஆ.9 ஆவணத்தை நான் தட்டச்சு செய்து கொண்டு வந்தபோது மகாலட்சுமி மற்றும் ரெங்கராஜ் ஆகியோர்களை தவிர வேறு நபர் யாரும் இருந்தார்களா என்றால் வேறு நபர்கள் யாரும் இல்லை. பிராது தபசில் சொத்தைப் பொருத்தும், வேறு சொத்துக்களைப் பொருத்தும், ரெங்கராஜ் என்பவர் அவருக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்தை 1ம் பிரதிவாதிக்கு கடந்த 07.12.2011ம்தேதியன்று பதிவு உயில் ஆவணம் ஒன்றை பிறப்பித்துக்கொடுத்துள்ளார் என்றாலும் மேற்படி உயில் ஆவணம் ரெங்கராஜ் என்பவரின் கடைசி உயில் ஆவணம் என்றாலும் மேற்படி ரெங்கராஜ் 24.12.2011ல் காலமாகிவிட்டார் என்றாலும் மேற்படி ரெங்கராஜ் பிறப்பித்துக்கொடுத்த உயில் ஆவணம் ஊர்ஜிதத்திற்கு வந்து பிராது தபசில் சொத்து மற்றும் வேறு பல சொத்துக்கள் 1ம் பிரதிவாதிக்கு கிடைக்கப்பெற்று

அவரே சர்வசுதந்திர பாத்தியத்துடன் அனுபவம் செய்து வந்தார் என்றாலும், மேற்படி பிராது தபசில் சொத்து 07.12.2011 ம் தேதிய உயில் ஆவணத்தில் 5 வது அயிட்டமாக காட்டப்பட்டுள்ளது என்றாலும் மேற்படி தபசில் சொத்துக்கள் வேறு சொத்துகள் 1 ம் பிரதிவாதிக்கு சென்றடைந்தநிலையில் ரெங்கராஜின் மனைவி மகாலட்சுமி அவரது கணவர் காலமான பின்பு வாரிசுபடி கிடைக்கத்தக்கதாக மோசடியாக மேற்படி மகாலட்சுமி அவரது சகோதரர் குமாரர் நடராஜன் என்பவருக்கு 14.07.2012 ம் தேதிய உயில் ஆவணம் பிறப்பித்துக்கொடுத்ததாக கூறுவது மோசடியானது என்றாலும் மகாலட்சுமிக்கு உயில் ஆவணத்தை பிறப்பித்துகொடுக்க எந்தவித உரிமையும் இல்லை என்றாலும் நடராஜன் என்பவரின் ஏற்பாட்டின் பேரில் மோசடியாக உயில் ஆவணம் புனையப்பட்டுள்ளது என்றாலும் 16.07.2012 ம் தேதிய உயில் ஆவணம் சொத்தின் உரிமையாளரிடமிருந்து பெறப்பட்ட ஆவணம் இல்லை என்றாலும் மேற்படி உயில் ஆவணம் சட்டப்படி செல்லக்கூடியதல்ல என்றாலும் இறந்து போன ரெங்கராஜ் 07.12.2011 ல் இந்த 1 ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த உயில் ஆவணம் ஊர்ஜிதத்திற்கு வந்த விவரம் இந்த வாதிக்கும், நடராஜனுக்கு நன்கு தெரியும் என்றாலும் 1 ம் பிரதிவாதி பிராது சொத்தையும், வேறு சொத்தையும் அனுபவம் செய்து வந்த விவரம் நடராஜனுக்கு நன்கு தெரியும் என்றாலும் பிராது சொத்தையும், வேறு சொத்துக்களையும் அபகரிக்க வேண்டும் என்று எண்ணத்தில் நடராஜன் மகாலட்சுமியிடம் மோசடியாக 16.07.2012 ல் பெற்றுள்ளார் என்றாலும் சரியல்ல. இந்த வாதிக்கு அவருக்கு பாத்தியப்பட்ட குடியிருப்பு வீடு துார்ந்து போய்விட்ட காரணத்தால் இந்த 1 ம் பிரதிவாதியிடம் அவர் அனுபவத்தில் இருந்த பிராதின் வீட்டை குடியிருக்க அனுமதி கேட்டதின்பேரில் 1 ம் பிரதிவாதி, வாதியிடம் 2014 ஏப்ரல் மாதம் குடியிருக்க அனுமதி கொடுத்தார் என்றும், அதன் பின்பு மேற்படி சொத்தை வாதி இந்த 1 பிரதிவாதியிடம் விலைக்கு கேட்க பிரதவாதி மறுத்ததாலும், வாதி நடராஜன் என்பவருடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு மோசடியாக பிராதின் தபசில்

சொத்தைப்பொருத்து பதிவு செய்யப்படாத 21.01.2011ம் தேதிய ஒத்தி ஆவணத்தையும், 02.03.2015ம் தேதிய பதிவு கிரைய ஆவணத்தையும், மோசடியாக உற்பத்தி செய்துகொண்டுள்ளார்கள் என்றாலும் இறந்து போன ரெங்கராஜோ அவரது மனைவி மகாலட்சுமியோ இந்த வாதியிடம் ரூ. 1லட்சம் தந்தது இல்லை என்றாலும் பதிவு செய்யப்படாத ஒத்தி ஆவணம் மேற்படி ரெங்கராஜ் என்பவரும் அவரது மனைவியும் பிறப்பித்துக்கொடுக்கவில்லை என்றாலும் பதிவு செய்யப்படாத ஒத்தி ஆவணம் இந்த வாதியால் நடராஜன் என்வரின் உதவியுடன் உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றாலும் இந்த வாதியின் மோசடி விவரம் தெரிந்த 1ம் பிரதிவாதி இந்த வாதிக்கு கொடுத்திருந்த குடியிருக்க அனுமதி கொடுத்ததை ரத்து செய்து இந்த வாதியை பிராது தபசில் சொத்தில் இருந்து காலி செய்ய பெரியோர்கள் மூலம் கூறியதன் பேரில் இந்த வாதி ஜனவரி மாதம் 2016ம் ஆண்டு தாவா சொத்தை காலி செய்து 1ம் பிரதிவாதியிடம் சுவாதீனத்தை ஒப்படைத்தார் என்றாலும் அதன் பின்பு தாவா சொத்தில் அத்து மீறி ஆக்கிரமிப்பு செய்து தாவா சொத்தை கைப்பற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யாக சங்கதிகளை கூறி வாதி குடியிருப்பதாக காண்பித்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றாலும் சரியல்ல. நடராஜன் 08.03.2015ல் பிறப்பித்துக்கொடுத்த கிரைய ஆவணம் மோசடியானது என்றாலும் அதற்கு மறுபயன் இல்லை என்றாலும் சரியல்ல. இந்த வழக்கிற்கு நடராஜன் என்பவர் அவசிய கட்சி என்றாலும், அவரை கட்சி சேர்க்காமல் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு அவசிய கட்சியை சேர்க்காத குறைபாட்டுக்கு தள்ளப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ. 3 ஆவணத்தில் சாட்சிகளாக கையெழுத்து செய்தவர்களில் 1வது சாட்சி எனது மைத்துனர், 2வது சாட்சி ரவிக்குமார் எனது மகன் என்றால் சரிதான். மேற்படி வா.சாஆ.3 ஆவணத்தில் மகாலட்சுமி கையெழுத்து செய்துள்ளாரா அல்லது கைரேகை வைத்துள்ளாரா என்ற விவரம் தெரியாது. மகாலட்சுமி இறந்தது சென்னையில் உள்ள சிட்லபாக்கத்தில். மகாலட்சுமி சென்னையில் இருந்து ஊருக்கு வரும்போது சுயநினைவுடன் இருந்தாரா என்றால் சுயநினைவுடன் தான் இருந்தார்.

சென்னைக்கு சென்ற மகாலட்சுமி ஊருக்கு வரவே இல்லை சிட்லபாக்கத்தில் வைத்தே இறந்துவிட்டார். மகாலட்சுமி சென்னையில் 1 வருடம் தான் இருந்தார். என்னிடம் காட்டப்படும் வாசா.ஆ.6 ல் உள்ள கையெழுத்து பெ.சீத்தாராமன் என்று இருப்பது சரிதான். பெ.சீத்தாராமன் என்று தான் எல்லா ஆவணங்களிலும் கையெழுத்து போடுவேன். மேற்படி கிரைய ஆவணத்தில் யார் சாட்சி கையெழுத்து செய்தார்கள் என்றால் பெருமாள்சாமி மற்றும் ஒருவர். மேற்படி கிரைய ஆவணத்தில் ஒத்தி ஆவணத்தை பற்றி சொல்லவில்லை என்றால் சொல்லப்பட்டுள்ளது. வா.சா.ஆ. 7 தீர்வை ரசீதுகள் அனைத்தும் ரெங்கராஜன் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். அதில் பணம் செலுத்துபவர் கையொப்பம் என்பதில் என் பெயர் இல்லை என்றால் சரிதான். மேற்படி 4 ரசீதுகளிலும் பெயர் இல்லை. வீட்டு ரசீது, மின் கட்டண ரசீது அனைத்தும் ரெங்ராஜன் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். குறிஞ்சான்குளம் ஊர் பஞ்சாயத்து தலைவராக வீ.சீனிவாசன் இருந்தாரா என்றால் இல்லை. மேற்படி தீர்வை ரசீதுகளில் ஊராட்சி மன்றத் தலைவர் வீ.சீனிவாசன் என்றுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. கோபாலகிருஷ்ணன் என்பவருடன் பிறந்தவர்தான் வீ.சீனிவாசன் என்றால் சரிதான். மேற்படி நபர்கள் எனது மருமகன்கள் தான். மேற்படி இரண்டு பேரும் வழக்கறிஞர்கள் என்றால் சரிதான். வழக்கு சம்மந்தப்பட்ட விவரங்கள் எல்லாம் நடராஜனுக்கு தெரியும் என்றால் சரிதான். நடராஜனை நீதிமன்றத்தில் விசாரிக்க அவசியம் இல்லை. நடராஜன் என்பவர் இந்த வழக்கிற்கு அவசிய கட்சி என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.9 ஆவணம் சட்டப்படி செல்லக்வடியதல்ல என்றால் சரியல்ல. நான் குடியிருக்கும் வீட்டிற்கு 1ம் பிரதிவாதி தீர்வை , மின் இணைப்பு, செலுத்தி வருகிறார் என்றால் அவர் செலுத்திய தீர்வை ரசீது தவறு. வழக்கு நிலுவையில் இருப்பதால் மேற்படி வீட்டிற்கு தீர்வை போட முடியவில்லை. நான் தாக்கல் செய்துள்ள வழக்கும், வழக்கு மூலமும் தவறானது என்றால் சரியல்ல.

Sd/-P.Mahindra Varma
Subordinate Judge, Sankarankovil.